1973 மார்ச் 12]

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மத்திய அரசு சொன்ன புதிய வரி போடும் ஆலோசனையை நாம் நிறைவேற்றித் தான் தீர வேண்டுமா ? நிறைவேற்றாவிட்டால் மத்திய அரசு என்ன செய்யும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நிறைவேற்றித்தான் தீர வேண்டும் என்று எந்தக் கட்டாயமும் கிடையாது. ஆனால், திட்டத்திற்காகத் தொகை ஒதுக்கவேண்டும் என்று சொல்லும் போது, அவர்கள் நம்முடைய ரிஸோர்ஸஸ் என்ன என்று கேட் பார்கள். ரிஸோர்ஸஸ் குறைவாக இருக்கும்போது, " நாங்கள் சொன்னதை நீங்கள் கேட்கவில்லை " என்று வாதிடுவதற்கு அதைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடும். ரிஸோர்ஸஸ்ஸை அவர்கள் சொன்ன வழியின் மூலமாகவும் வேறு வழியிலும் மாநில அரசு பெருக்கிக்கொள்ளலாம்.

பரிசுச்சீட்டுகளில் திருத்தம் செய்து பரிசு கோரியவர்கள்

***327 வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

1971, 1972 ஆகிய இரு ஆண்டுகளிலும் பரிசுச் சீட்டுகளைத் திருத்தி பரிசு பெற முயன்றதாக எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) பரிசுச் சீட்டில் மோசடி செய்து பரிசுத் தொகை கோரியவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு மொத்தம் 26 வழக்குகள் அனுப்பப்பட்டன.

1971-ல்	22
1972-ல் (30—6—1972 வரையில்)	4
மொத்தம்	26

(இ) அந்த 26 வழக்குகளின் தொகை வாரியான விவரங்கள் வருமாறு :—

1,00,000 சம்பந்தப்பட்ட வழக்குகள்	2
10,000 சம்பந்தப்பட்ட வழக்குகள்	5
3,000 சம்பந்தப்பட்ட வழக்குகள்	1
1,000 சம்பந்தப்பட்ட வழக்குகள்	17
100 சம்பந்தப்பட்ட வழக்குகள்	1
மொத்தம்	26

(உ) வழக்குகளின் தற்போதைய நிலைகள் :—

குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டவை	3
குற்றம் சாட்டப்பட்டவர்களில் விடுதலையில் முடிந்தவை	1
கண்டுபிடிக்கமுடியாது என அறிவிக்கப் பட்டவை	15
நீதி மன்றத்தின் முன் முடிவுருமல் இருப்பவை	3
காவல் துறையில் புலனய்வில் உள்ளவை	4
	26

திரு. ஆ. பரந்தாமன் : பரிசு கிடைத்த மற்றவர்களுடைய பரிசுச் சீட்டைப் பயன்படுத்திப் பணம் பெற முயன்றவர்களின்மீது வழக்குகள் பதிவாகியிருக்கின்றனவா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பரிசுச் சீட்டு திருத்தப் பட்டு பணம் கோரியவர்கள்மீதும் வேறு சில பேர்களுடைய பரிசுச் சீட்டுக்களை வைத்து பணம் பெற முயன்றவர்கள் பேரிலும் வழக்குகள் பதிவாகியுள்ளன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்படிப்பட்ட குற்றங்கள் புரிந்தவர்கள் அத்தனை பேர்களும் நம் மாநிலத்தைச் சேர்ந்தவர் களா ? வெளி மாநிலங்களில் உள்ளவர்கள் இதில் ஏதாவது தொடர்பு கொண்டிருக்கிறார்களா என்ற விவரங்கள் இந்த வழக்குகளில் இருந்து ஏதாவது தெரிய வந்ததா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த 26 வழக்குகளில் பெரும்பாலானவர்கள் வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்.

திரு. கே. எ. வகாப் : மதுவிலக்கை ஒத்திவைத்து பிறகு பரிசுச் சீட்டுகளின் விற்பனை குறைந்திருக்கிறதா? அப்படி அதிகப் படியாகக் குறைந்திருந்தால் அந்தப் பரிசுச் சீட்டுகளை வெளி யிடுவதுபற்றி அரசு மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மதுவிலக்கை ஒத்தி வைத்தது பரிசுச் சீட்டு இரண்டையும் இணைக்க முடியாது என்றாலும் 1968-69-ல் இருந்து கணக்குப் பார்த்தால் 1972-73-ல் விற்பனை குறைந்துதானிருக்கிறது.

திரு. எம். தேவராசன் : இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டத்தை மேலும் கவர்ச்சி உள்ளதாக ஆக்கி விற்பனையை அதிகரிக்க ஏதாவது புதிய திட்டங்கள் அரசிடம் உள்ளனவா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர் களும் அரிய கருத்துக்களை வழங்கினால் அவைகளும் பரிசீலிக்கப் படும்.

திரு. வை. பாலசுந்தரம் : பரிசுச் சீட்டுத் தொகை மீது மத்திய அரசு 35 சத விதம் வரி விதித்திருப்பதால் பரிசுச்சீட்டுத் திட்டம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதால் மத்திய அரசு இந்த வரி விதிப்பிலிருந்து ஏதாவது பங்குத் தொகையை மாநில அரசுக்குத் தருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது வருமான வரி. பொதுவாக மத்திய அரசிலிருந்து வருகிற வரிப் பங்குத் தொகையைக் கணக்கிடுகிற நேரத்தில் அது கணக்கிடப்படும். ஆனால் 33-1/3 சதவிதம் வருமான வரி இந்தப் பரிசுச் சீட்டிலிருந்து லாபம் பெறுகிறவர்கள், பரிசு பெறுபவர்களுக்கு விதிப்பதன் காரணமாக இது ஓரளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதும் உண்மைதான்.

Endowments for Tamil Development

* 328 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the details of the Endowments made by Kasimutt in Thanjavur district for the promotion of Tamil learning under the Presidentship of the Collector of the district for 1970–71?